நெடுஞ்சாலைத்துறை

அனுப்புநர்,
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி,
சென்னை–25.

பெறுநர்
1. **தலைமைப்பொறியாளர் (நெ),**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
சென்னை–25.
2. **தலைமைப்பொறியாளர் (நெ),**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
மதுரை–625002.
3. **தலைமைப்பொறியாளர் (நெ),**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
திருச்சி–620020.
4. **தலைமைப்பொறியாளர் (நெ),**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
கோயம்புத்தூர்–641043.
5. **தலைமைப் பொறியாளர்,**
தேசிய நெடுஞ்சாலை, சென்னை –25.
6. **தலைமைப் பொது மேளாளர்**
தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்,
கிண்டி, சென்னை –25.
7. **தலைமைப்பொறியாளர், (நெ)**
தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, சென்னை–25.
8. **தலைமைப் பொறியாளர், (நெ),**
சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், சென்னை – 25.
9. **தொழில்நுட்ப உறுப்பினர்**
தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள்
ஆணையம், கிண்டி, சென்னை –25.

**கடித எண் அறிவிப்புகள்/மு.இ/சவினா/ நாள் 02.07.2026**

**ஐயா/அம்மையீர்**

**பொருள் :** (i)15.03.2026–க்கு பிறகு ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்படாத பணிகள் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டும் தொடங்கப்படாத பணிகள் மறு ஆய்வு செய்தல் (ii) கடந்த 2021–2025 வரை அரசு ஆணை வெளியிடப்பட்டும் இதுவரை செயல்படுத்தப்படாத அறிவிப்புகள் (Announcements) மற்றும் அரசாணை கிடைக்கபெறவேண்டிய அறிவிப்புகள் தொடர்பான அறிக்கை கோருதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசு கடிதம் எண் 14555786/எச்.என்2/2026–1 நாள் 30.06.2026

******

அரசின் அறிவுறுத்தலின்படி, தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பணிகள் மற்றும் 2021 முதல் 2025 வரை அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு கீழ்க்காணும் விவரங்களை தொகுத்து இவ்வலுவலகத்திற்கு அவசரமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

I. 15.03.2026 அல்லது அதற்குப் பின்னர் ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்படாத பணிகள் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டும் தொடங்கப்படாத அனைத்து பணிகளுக்கும் கீழ்க்கண்ட விவரங்கள் அனுப்பப்பட வேண்டும்.

1. பணியின் பெயர்.
2. நிர்வாக ஒப்புதல் / அரசு ஆணை எண் மற்றும் தேதி.
3. டெண்டர் அறிவிப்பு எண் மற்றும் தேதி.
4. டெண்டர் இறுதி செய்யப்பட்ட தேதி.
5. ஒப்பந்ததாரரின் பெயர்.
6. ஒப்பந்த எண் மற்றும் தேதி.
7. ஒப்பந்த மதிப்பு.
8. பணியின் தற்போதைய நிலை.
9. பணி இதுவரை தொடங்கப்படாததற்கான காரணங்கள்.
10. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ள இனங்கள் குறித்து தெளிவாக அறிக்கையில் தெரிவிக்கவேண்டும்

II. அதேபோன்று அரசு ஆணை **வெளியிடப்பட்டு இதுவரை செயல்படுத்தப்படாத அறிவிப்புகள்** (Announcements) **மற்றும்** அரசாணை கிடைக்கபெறவேண்டிய அறிவிப்புகள் திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரப்பட்ட மற்றும் கோரப்படவுள்ள அறிவிப்புகள் ஒவ்வொன்றையும் துறை அளவில் முழுமையாக ஆய்வு செய்து, தற்போதைய சூழலில் செயல்படுத்துவது உண்மையிலேயே அவசியமானவை மட்டுமே தொடர பரிந்துரைக்கப்பட வேண்டும்.

எனவே, மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்களையும் அறிக்கையாக, உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. **இதனை மிகவும் அவசரமானதாகக் கருதி முன்னுரிமை அடிப்படையில்** நடவடிக்கை **மேற்கொள்ளுமாறு** அனைத்து துறைத் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2/1/26

முதன்மை இயக்குநருக்காக,
நெடுஞ்சாலைத்துறை,

2/1/26

<u>மிக அவசரம்</u>

நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள்
(எச்.என்.2) துறை
தலைமைச்செயலகம், சென்னை – 9.
தொலைபேசிஎண். 044 – 2566 5503
மின்னஞ்சல்:
hnsectionhighways@gmail.com

<u>கடித எண். 14555786 /எச்.என்.2/2026 -1, நாள்: 30.06.2026</u>

அனுப்புநர்
திரு. மெ.சீ.ராஜேஷ், எம்.காம்.,
அரசு இணைச்செயலாளர்.

பெறுநர்
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25(இ).

அய்யா,

பொருள்: நிதித்துறை – ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் திட்டங்கள் – மறு ஆய்வு செய்தல் – பட்டியல் அனுப்புதல் -தொடர்பாக.

பார்வை: அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதி (அநமு-பவ)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை, கடித எண்.இ-14316788/ அநமு-பவ/2026, நாள் 21.06.2026.

*****

பார்வையில் காணும் கடிதத்தின் நகல் தங்களுக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுவதுடன், இதன் மீது தங்களின் மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது. மேலும், அக்கடிதத்தில், 15.03.2026 அன்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருவதற்கு முன்னதாக, சில துறைகளில் அவசரம் அவசரமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முறையான பேச்சுவார்த்தை நடத்தப்படாமல், கூடுதல் விலைக்கு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும். தற்போது இது, அரசின் கவனத்திற்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. எனவே, இது தொடர்பாக, கீழ்காணும் இனங்களின் மீதான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் அதன் மீது உரிய அறிக்கையினை உடனடியாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

- 15.03.2026-க்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இதுவரை பணி ஆணை வழங்கப்படாத அல்லது பணிகள் தொடங்கப்படாத இனங்களில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ள இனங்களை ஆய்வு செய்து அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் / அறிவிக்கைகள் மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக முறையே

ஆணை வேண்டியும், திருத்திய நிர்வாக ஒதுக்கீடு கோரியும் மாண்புமிகு அமைச்சர் நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பும் கோப்புகளை மீள ஆய்வு செய்து தற்போதைய நடைமுறைகளுக்கு ஏற்றவாறு உள்ள திட்டங்களை மட்டும் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.

3. மேலும், இதனை அவசர இனமாகக் கருதவும்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு இணைச்செயலாளருக்காக

**நகல்**

இ,கோ/உ.நகல்

R.

மிகவும் அவசரம்

நிதி (அநமு-பவ)த் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 09.

கடித.எண். இ-14316788/அநமு-பவ/2026, நாள்:21.06.2026

Principal Secretary to Govt.
1187
25 JUN 2026
Chennai-09
Highways and Minor Ports Dept

அனுப்புநர்,
திரு. மு.அ. சித்திக், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ அரசு முதன்மைச் செயலாளர்கள்/ அனைத்து துறை அரசு செயலாளர்கள்,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.(பெயரில்)

Pl. speak

ஐயா/அம்மையீர்

பொருள்: நிதித்துறை – ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் திட்டங்கள் – மறு ஆய்வு செய்தல் – பட்டியல் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை: மாண்புமிகு அமைச்சர், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளரின் 08.06.2026 நாளிடப்பட்ட குறிப்பு.

*****

DS (Tech)

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களின் மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்காணும் கடிதத்தில், 15.03.2026 அன்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருவதற்கு முன்னதாக, சில துறைகளில் அவசரம் அவசரமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முறையான பேச்சுவார்த்தை நடத்தப்படாமல், கூடுதல் விலைக்கு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது இது, அரசின் கவனத்திற்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. எனவே, அனைத்து துறைகளின் செயலாளர்கள், தங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகளில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- 15.03.2026-க்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இதுவரை பணி ஆணை வழங்கப்படாத அல்லது பணிகள் தொடங்கப்படாத இனங்களில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ள இனங்களை ஆய்வு செய்து அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

த.பி.பா

- கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்/ அறிவிக்கைகள் மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக முறையே ஆணை வேண்டியும், திருத்திய நிர்வாக ஒதுக்கீடு கோரியும் மாண்புமிகு அமைச்சர், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பும் கோப்புகளை மீள ஆய்வு செய்து தற்போதைய நடைமுறைகளுக்கு ஏற்றவாறு உள்ள திட்டங்களை மட்டும் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும். மேலும், அத்திட்டங்களின் பட்டியலை மாண்புமிகு அமைச்சரின் அலுவலகத்திற்கும், அதன் நகலை நிதி(அநமு-பவ)த் துறைக்கு உடன் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

21/05/2026

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

HN                                                                                              R

மிகவும் அவசரம்

நிதி (அநமு–பவ)த் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 09.

**கடித.எண். இ–14316788/அநமு–பவ/2026, நாள்:21.06.2026**

Principal Secretary to Govt. Highways & Minor Ports Dept. 1187 25 JUN 2026 Chennai-09

அனுப்புநர்,
திரு. மு.அ. சித்திக், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ அரசு முதன்மைச் செயலாளர்கள்/
அனைத்து துறை அரசு செயலாளர்கள்,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.(பெயரில்)

ஐயா/அம்மையீர்

பொருள்: நிதித்துறை – ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் திட்டங்கள் – மறு ஆய்வு செய்தல் – பட்டியல் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை: மாண்புமிகு அமைச்சர், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளரின் 08.06.2026 நாளிடப்பட்ட குறிப்பு.

*****

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களின் மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்காணும் கடிதத்தில், 15.03.2026 அன்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருவதற்கு முன்னதாக, சில துறைகளில் அவசரம் அவசரமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முறையான பேச்சுவார்த்தை நடத்தப்படாமல், கூடுதல் விலைக்கு ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது இது, அரசின் கவனத்திற்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

3. எனவே, அனைத்து துறைகளின் செயலாளர்கள், தங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகளில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- 15.03.2026–க்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இதுவரை பணி ஆணை வழங்கப்படாத அல்லது பணிகள் தொடங்கப்படாத இனங்களில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ள இனங்களை ஆய்வு செய்து அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்/ அறிவிக்கைகள் மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக முறையே ஆணை வேண்டியும், திருத்திய நிர்வாக ஒதுக்கீடு கோரியும் மாண்புமிகு அமைச்சர், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பும் கோப்புகளை மீள ஆய்வு செய்து தற்போதைய நடைமுறைகளுக்கு ஏற்றவாறு உள்ள திட்டங்களை மட்டும் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும். மேலும், அத்திட்டங்களின் பட்டியலை மாண்புமிகு அமைச்சரின் அலுவலகத்திற்கும், அதன் நகலை நிதி(அநமு-பவ)த் துறைக்கு உடன் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

21/06/2021

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்

இருப்புக்கோப்பு /உதிரி நகல்